நகராட்சி அலுவலகம்,
களக்காடு.

நாள். 25.08.2023.

களக்காடு நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2023ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 28ம் தேதி திங்கள் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

| நாள். | தீர்மான எண். | மன்ற பொருள் | மன்றத்தின் முடிவு |
|---|---|---|---|
| 28.08.2023 | 354 | **பொருள் எண்: 01**<br>களக்காடு நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்டவாறான மூன்று ஈப்பு வாகனங்களுக்கு காப்பீட்டு பாலிசியானது 10.08.2023 நள்ளிரவுடன் முடிவடைவதால் காப்பீட்டினை புதுப்பிக்க சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனமான நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி மூலம் ரூ. 60514/– செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அரசு விதிகளுக்கு உட்பட்டு கட்டணம் செலுத்துமாறு அனுமதிக்கப் படுகிறது. |

| வ. எண் | வாகன எண் | பாலிசி எண் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | TN72CV2767 | 646019312210001530 | 16498 |
| 2. | TN72CV2781 | 646019312210001529 | 16498 |
| 3. | TN72CV2718 | 646019312210001631 | 27518 |
| | மொத்த தொகை ரூ. | | 60514 |

**அலுவலக குறிப்பு:**

மேற்கண்ட காப்பீட்டு பாலிசிகளை உடனடியான புதுப்பிக்க வேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டதால், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் 1998 பிரிவு (57)ன் கீழ் நகராட்சி ஆணையருக்கு வழங்கப்பட்ட அனுமதி வரம்புகையின்படி, உடனடியாக மேற்கண்ட தொகையினை நகராட்சி பொது நதியிலிருந்து சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 52/2022/இ1

<table>
<tr>
<td>28.08.2023</td>
<td>355</td>
<td><u>பொருள் எண்: 02</u><br>களக்காடு நகராட்சி வார்டு எண்.18 கோட்டை விஸ்வகர்மா தெருவில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.1.25 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களால் முன் அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து 16.08.2023 அன்று கீழ்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்த தாரர் பெயர்</th><th>கூடுதல்/ குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">வார்டு எண். 18 கோட்டை விஸ்வகர்மா தெருவில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணிகள்.</td><td rowspan="2">1.25</td><td>திரு. J.ஜஸ்டின் பிரதிப்</td><td>4.03% கூடுதல்</td></tr>
<tr><td>திருமதி. என்.எம். புஷபம்</td><td>0.21% குறைவு</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>மேற்கண்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம். பணி அவசர அவசியம் கருதி நகர்ன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருமதி. என்.எம். புஷபம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 398/2023/இ1</td>
<td>குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருமதி. புஷ்பம் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்க அனுமதிக்கப் படுகிறது.</td>
</tr>
<tr>
<td>28.08.2023</td>
<td>356</td>
<td><u>பொருள் எண்: 03</u><br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு செய்ய தேவையான மின் உபகரணங்களை சப்ளை செய்ய 11.08.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.</td>
<td>அரசு விதிகளுக்கு உட்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.ஜஸ்டின் பிரதீப் அவர்களுக்கு அனுமதிக்கப் படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>கூடுதல்/ குறைவு</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">இந்நகராட்சி அனைத்து வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு செய்ய தேவையான மின் உபகரணங்களை சப்ளை செய்தல்.</td><td rowspan="2">3.50 லட்சம்</td><td>திரு. J.ஜஸ்டின் பிரதீப்</td><td>மதிப்பிட்டின் விலைக்கு</td></tr>
<tr><td>திருமதி. என்.எம். புஷபம்</td><td>4.93% கூடுதல்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. J.ஜஸ்டின் பிரதீப் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 593/2023/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>28.08.2023</td>
<td>357</td>
<td>
<u>பொருள் எண்: 04</u>
அரசாணை நிலை எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள். 10.03.2023ன்படி, நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் ஏற்கனவே உள்ள தெருவிளக்குகளை ஆற்றல் திறன் கொண்ட LED விளக்குகளாக மாற்றம் செய்யும் பொருட்டு மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதியின் கீழ் (State Urban Infrastructure Development Fund) நிதி ஒதுக்கீடு செய்தும், மேற்கண்ட நிதியினை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்தின் மூலம் (TUFIDCO) திரும்ப செலுத்தும் வகையில் கடனாக அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் களக்காடு நகராட்சியில் உள்ள 1644 தெருவிளக்குகளை ஆற்றல் திறன் கொண்ட LED விளக்குகளாக மாற்றம் செய்ய ரூ.247.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தும், மேற்கண்ட கடன் தொகையினை 6வருட கால அவகாசத்தில் வருடத்திற்கு 5 சதவீதம் வட்டியுடன் TUFIDCO நிறுவனத்திற்கு திரும்ப செலுத்தும்படி அரசாணையில் உத்திரவிடப்பட்டுள்ளது, இப்பொருள் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.
</td>
<td>அலுவலகக் குறிப்பின்படி, உரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு பணி செய்யும்படி அனுமதிக்கப் படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td><u>அலுவலக குறிப்பு:</u><br>அரசாணை நிலை எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள். 10.03.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு களக்காடு நகராட்சி பகுதியில் உள்ள 1644 தெருவிளக்குகளை ஆற்றல் திறன் கொண்ட LED விளக்குகளாக மாற்றம் செய்யும் பொருட்டு கடனாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.247.00 இலட்சத்தினை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்திற்கு உரிய வட்டியுடன் மின் கட்டண சேமிப்பு நிதியிலிருந்து திரும்ப செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>28.08.2023</td><td>358</td><td><u>பொருள் எண்: 05</u><br>களக்காடு நகராட்சியில் 2022-2023ம் ஆண்டிற்கு வரி மற்றும் வரியில்லா இனங்களில் நடப்பு கேட்பில் 100% வரிவசூல் செய்தமைக்கு மிகை ஊதியம் வழங்க கோரி வருவாய் உதவியாளர்கள் விண்ணப்பம் செய்துள்ளார்கள். உள்ளாட்சி நிர்வாக அரசாணை எண். 2196, நாள். 20.11.1951ல் வரி மற்றும் வரியில்லா இனங்களில் 97% மேல் வரி மற்றும் வரியில்லா இனங்களை வரி வசூல் செய்தால் வருவாய் உதவியாளர்களுக்கு ஒரு மாத அடிப்படை ஊதியம் மிக ஊதியமாக வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, களக்காடு நகராட்சியில் 2022-2023ம் ஆண்டுக்கு அனைத்து வார்டுகளிலும் வரி மற்றும் வரியில்லா இனங்களில் 100% வசூல் செய்தமைக்கு 2022-2023ம் ஆண்டிற்கு மிகை ஊதியம் ரூ. 1,63,200/- வழங்க நகர் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியாளர்கள் பெயர்</th><th>அடிப்படை ஊதியம்</th><th>100% மிகை ஊதியம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு. முத்துராமலிங்கம்,<br>வருவாய் உதவியாளர்</td><td>37400</td><td>37400</td></tr>
<tr><td>2.</td><td>திரு. முருகேசன்,<br>வருவாய் உதவியாளர்</td><td>34200</td><td>34200</td></tr>
<tr><td>3.</td><td>திருமதி. வனஜா,<br>வருவாய் உதவியாளர்</td><td>37400</td><td>37400</td></tr>
<tr><td>4.</td><td>திரு. கோமதி சங்கர்,<br>வருவாய் உதவியாளர்.</td><td>19500</td><td>19500</td></tr>
<tr><td>5.</td><td>திரு. சண்முகம்,<br>வருவாய் உதவியாளர்<br>(பொறுப்பு)</td><td>34700</td><td>34700</td></tr>
</table>
ந.க.எண்.393/2023/அ1<br><u>அலுவலக குறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 28.08.2023 | 359 | **<u>பொருள் எண்: 06</u>**<br>களக்காடு நகர்மன்ற 4வது வார்டு உறுப்பினர் கீழப்பத்தை தெருவில் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் செப்டிக் டேங் நிரம்பியுள்ளதால் அதனை சுத்தப்படுத்தி தர கோரியுள்ளார். மேற்கண்ட செப்டிக் டேங்கினை தனியார் செப்டிக் டேங்க் உரிமையாளர் மூலம் சுத்தப்படுத்த லிட்டர் ஒன்றுக்கு ரூ.2 வீதம் பத்தாயிரம் லிட்டர் அளவுக்கு சுத்தம் செய்ய வேண்டியுள்ளது. எனவே அதற்கான செலவீனம் ரூ.20,000/- ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 865/2023/எச்1<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மேற்கண்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |
| 28.08.2023 | 360 | **<u>பொருள் எண்: 07</u>**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தினை பேனர் மூலம் விளம்பரம் செய்ய வகைக்கு ரூ.12700/- செலவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மேற்கண்ட அரசு விளம்பரத்தினை பொதுமக்கள் அறியும் வண்ணம் விளம்பரப்படுத்திய வகைக்கு செலவு செய்யப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |
| 28.08.2023 | 361 | **<u>பொருள் எண்: 08</u>**<br>களக்காடு நகராட்சி அலுவலகத்திற்கு தினத்தந்தி, தினமலர், தினமணி, தினகரன் ஆகிய நாளிதழ்கள் வழங்கப்பட்டு வரப்படுகிறது. மேற்கண்ட தினசரிகளுக்கு 01.04.2022 முதல் 31.03.2023 வரையுள்ள காலங்களுக்கு சம்பந்தப்பட்ட நாளிதழ்களின் கேட்பு படி ரூ. 9319/- வழங்க வேண்டியுள்ளது. இச்செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 28.08.2023 | 362 | **<u>பொருள் எண்: 09</u>**<br>களக்காடு நகராட்சி பகுதியினை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளி கழிப்பிடம் இல்லா நகராட்சியாக அறிவித்து சான்று பெற வேண்டியுள்ளதால் (ODF) அதன் பொருட்டான ஆய்வுகள் QCA மூலம் 4.8.2023 முதல் 6.8.2023 வரை மூன்று நாட்கள் நகராட்சிக்கு சொந்தமான சமுதாய மற்றும் பொதுக்கழிப்பிடங்களை ஆய்வு மேற்கொள்ளப்படவிருந்ததனை தொடர்ந்து, மேற்கண்ட கழிப்பிடங்களுக்கு அடிப்படை பராமரிப்பு பணிகளை மேற்கொண்டதற்கு ரூ.29987/- செலவிடப்பட்டுள்ளது. இச்செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |
| 28.08.2023 | 363 | **<u>பொருள் எண்: 10</u>**<br>களக்காடு நகராட்சியின் குடிநீர் திட்ட துணை விதிகளை திருத்தம் செய்யப்பட்டது தொடர்பாக மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய அரசு அச்சகத்திற்கு ரூ.8400/- செலுத்த வேண்டியுள்ளது. இத்தொகையினை செலுத்த மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். ரூ.8400/-ஐ துணை பணி மேலாளர், அரசு அச்சகம், மதுரை அவர்களுக்கு செலுத்தலாம். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். ந.க.எண்.72/2018/இ1 | அனுமதிக்கப் பட்டது. |
| 28.08.2023 | 364 | **<u>பொருள் எண்: 11</u>**<br>களக்காடு நகராட்சி வார்டு எண். 20, வியாசராஜபுரம் பஸ்ஸ்டாண்ட் கீழ நடுத்தெருவில் சாலை மேம்பாட்டு பணிக்காக ரூ. 27.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |
| 28.08.2023 | 365 | **<u>பொருள் எண்: 12</u>**<br>களக்காடு நகராட்சி வார்டு எண். 02, மஞ்சுவிளை காந்திநகர் தெற்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு ரூ. 9.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | **<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 28.08.2023 | 366 | **<u>பொருள் எண்: 13</u>**<br>களக்காடு நகராட்சி வார்டு எண். 07, கீழக்கருவேலன்குளம் தெற்கு தெருவில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய கழிப்பிடத்தில் தண்ணீர் வசதி மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ரூ. 4.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |